RS Polyclinic
OUR EXPERIENCED DOCTORS
Dr M. Rajkumar
MBBS MS DNB MCh (Vascular)
96410 25996
Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari
MBBS DGO DNB
94441 25878
Sr Dye Surgeon
Dr Sathish Rajkumar
MBBS MS FMAS
94435 40179.3
Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R.
MBBS MS MCh (Vascular)
9884 65094.5
Sr Vascular Surgeon
Dr Salma R.
MBBS MD
97780 6774.2
General Physician
Dr Praveena E
MBBS MS (ENT)
9944 10044.3
Sr ENT Surgeon

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
வீடார் ரெயின் போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

‘சிட்டுக்குறிஞ்சி’ திரைப்பட இசை வெளியீட்டு விழா!

நவம்பர் 27-ல் திரையரங்குகளில் வெளியாகிறது



சென்னை, நவ.18 – வி.ஜே. மீனாட்சி சுந்தரம் இயக்கத்தில், பிளாக் அண்ட் ஒயிட் மீடியா சொல்யூஷன்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள ‘சிட்டுக்குறிஞ்சி’ திரைப்படம், ஃபேண்டஸி மற்றும் ரொமான்டிக் அம்சங்களுடன் இரண்டு வெவ்வேறு காலக்கட்டங்களை இணைக்கும் புதுமையான கதைக்களத்தில் உருவாகியுள்ளது. இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக இயக்குநர் ஆர்.வி. உதயகுமார் கலந்து கொண்டார்.

இயக்குநர் வி.ஜே. மீனாட்சி சுந்தரம், தயாரிப்பாளர் டி. ஜூட் ஆனந்த், நடிகர்கள் ரஜித் சிஆர், தோழர் எல்.வி. ஆதவன், ஜி.எம். குமார், நக்ஷா சரண், ஸ்ரீராம் கார்த்திக், வெங்கடேஷ், வி.ஜே. பப்பு மற்றும் படக்குழுவினர் பங்கேற்றனர்.

இப்படத்தின் ஒளிப்பதிவை ஏ. பிரான்சிஸ் ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார். மாரா இசையமைத்துள்ள இப்படத்திற்கு ஹங்கேரியைச் சேர்ந்த புகழ்பெற்ற புடாபெஸ்ட் ஃபில்ஹார்மோனிக் ஆர்கெஸ்ட்ரா இசைக்குழுவும் பங்களித்துள்ளது. கொடைக்கானல் அருகே 80 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமான கிராமம் மற்றும் அரங்க அமைப்புகள் உருவாக்கப்பட்டுப் படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது. 1983 மற்றும் 2025 ஆகிய காலக்கட்டங்களை இணைக்கும் வகையில் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

இயக்குநர் வி.ஜே. மீனாட்சி சுந்தரம் பேசுகையில், ‘சிட்டுக்குறிஞ்சி’ திரைப்படம் பல்வேறு சவால்களைக் கடந்து உருவாகியுள்ளதாகவும், பிளாக் அண்ட் ஒயிட் மீடியா சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் 20 ஆண்டுகாலப் பயணத்தில் இது முக்கியமான முயற்சி என்றும் தெரிவித்தார். இப்படத்தின் வெற்றிக்கு ஊடகங்களின் ஆதரவு அவசியம் எனக் கேட்டுக்கொண்டார்.

நடிகர் தோழர் எல்.வி. ஆதவன், இயக்குநர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் கடின உழைப்பைப் பாராட்டியதுடன், 80 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமான கிராமத்தை உருவாக்கியிருப்பது பாராட்டுக்குரியது என்றார். சிறிய திரைப்படங்களுக்கும் ரசிகர்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஒளிப்பதிவாளர் பிரான்சிஸ் ராஜ்குமார், காதல், ஃபேண்டஸி மற்றும் ரொமான்ஸ் கலந்த வித்தியாசமான கதைக்களத்தில் இப்படம் உருவாகியுள்ளதாகவும், மகேந்திரன் கணேசன் படத்தொகுப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இசையமைப்பாளர் மாரா, புடாபெஸ்ட் ஃபில்ஹார்மோனிக் ஆர்கெஸ்ட்ராவுடன் இணைந்து பணியாற்றியது தனது இசைப் பயணத்தில் அரிய வாய்ப்பு என்று பெருமிதம் தெரிவித்தார்.

மூத்த நடிகர் ஜி.எம். குமார், சிறிய திரைப்படங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் உள்ள சவால்களைச் சுட்டிக்காட்டி, அவற்றுக்கும் திரையரங்குகளில் உரிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்றார். படத்தொகுப்பாளர் மகேந்திரன் கணேசன், இரண்டு காலக்கட்டங்களில் பயணிக்கும் புதுமையான கதையமைப்பு ரசிகர்களைக் கவரும் என நம்பிக்கை தெரிவித்தார்.

தயாரிப்பாளர் டி. ஜூட் ஆனந்த், படத் தயாரிப்பின்போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதாகவும், உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பிரம்மாண்டமான அரங்க அமைப்புகள், பாடல்கள் மற்றும் நடனக் காட்சிகள் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். நடிகை நக்ஷா சரண், இயக்குநர், தயாரிப்பாளர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் உழைப்பைப் பாராட்டி, ரசிகர்கள் குடும்பத்துடன் திரையரங்குகளுக்கு வந்து படத்தை ரசிக்க வேண்டும் என்றார். நடிகர் ராஜித், ஒவ்வொரு காட்சியும் வித்தியாசமான அனுபவத்தைத் தரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இசை மற்றும் பின்னணி இசை படத்திற்கு வலுசேர்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நடிகர் ஸ்ரீராம் கார்த்திக், இயக்குநர் கூறிய கதை தங்களை ஒரு புதிய உலகத்திற்கே அழைத்துச் சென்றதாகக் குறிப்பிட்டார். நடன அமைப்பாளர் தீனா, படத்தின் திரைக்கதை மிகவும் சுவாரஸ்யமாக இருப்பதாகவும், பாடல்கள் மற்றும் நடனக் காட்சிகள் சிறப்பாக அமைந்துள்ளதாகவும் பாராட்டினார். இசையமைப்பாளர் தீனா, தயாரிப்பாளரின் தொழில்நுட்பப் புரிதலையும், புடாபெஸ்ட் இசைக்குழுவின் பங்களிப்பையும் பாராட்டினார்.

ஆர்.வி. உதயகுமார், ரஜித் சிஆர் உள்ளிட்ட நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைப் பாராட்டி, திரைப்படம் வெற்றிபெற வாழ்த்தினார். டி.எஸ்.ஆர். சுபாஷ், பிளாக் அண்ட் ஒயிட் ஸ்டுடியோவின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகளைப் பாராட்டியதுடன், சிறிய திரைப்படங்களுக்கு உரிய திரையரங்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்றார். வெங்கடேஷ் மற்றும் வி.ஜே. பப்பு ஆகியோரும் படக்குழுவினரின் ஒற்றுமை, நடிப்பு மற்றும் கதையமைப்பைப் பாராட்டி ஆதரவு கோரினர்.

ரஜித் மேனன், ஸ்ரீராம் கார்த்திக், தீப்ஷிகா, நக்ஷா சரண், வி.ஜே. பப்பு, ஜி.எம். குமார், தோழர் எல்.வி. ஆதவன், பூ ராமச்சந்திரன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

எழுத்து மற்றும் இயக்கம் – வி.ஜே. மீனாட்சி சுந்தரம்; தயாரிப்பு – டி. ஜூட் ஆனந்த்; இசை – மாரா; ஒளிப்பதிவு – ஏ. பிரான்சிஸ் ராஜ்குமார்; படத்தொகுப்பு – மகேந்திரன் கணேசன்; கலை இயக்கம் – ராம்ஜி; நடனம் – தீனா.

‘சிட்டுக்குறிஞ்சி’ திரைப்படம் வரும் நவம்பர் 27-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. புதுமையான கதைக்களம், பிரம்மாண்டமான அரங்க அமைப்புகள் மற்றும் சர்வதேச இசைக்குழுவின் பங்களிப்பு ஆகியவை படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளன.